கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம்
N.S.R. ரோடு, ஆரோக்கியசாமி வீதி, கே.கே.புதூர் (அஞ்) கோயம்புத்தூர். 641038
மின் அஞ்சல் முகவரி:cbedrbpds@gmail.com

**அறிவிக்கை எண்:5/2020/மா.ஆ.நி** **நாள்:16.06.2020**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் பின்வரும் கூட்டுறவு நிறுவனங்களில் காலியாக உள்ள நியாயவிலைக்கடை விற்பனையாளர் (Sales Person) மற்றும் கட்டுநர் (Packer) பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 15.07.2020 பிற்பகல் 5.45 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

**நியாயவிலைக்கடை விற்பனையாளர்**

| **வ. எண்.** | **சம்பள விகிதம்** | **கூட்டுறவு நிறுவனத்தின் வகை** | **காலிப்பணியிட எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து ஓராண்டிற்கு ரூ.5000/- தொகுப்பூதியமும் அதனை தொடாந்து நியாயவிலைக்கடை விற்பனையாளருக்கு ரூ.4300-12000 என்ற காலமுறை ஊதியம். | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 24 |
| 2 | | தொடக்க கூட்டுறவு பண்டகங்கள் | 14 |
| 3 | | நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகங்கள் | 6 |
| 4 | | வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 39 |
| | மொத்தம் | | 83 |

**நியாயவிலைக்கடை கட்டுநர்:-**

| **வ. எண்.** | **சம்பள விகிதம்** | **கூட்டுறவு நிறுவனத்தின் வகை** | **காலிப்பணியிட எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து ஓராண்டிற்கு ரூ.4250/- தொகுப்பூதியமும் அதனை தொடாந்து நியாயவிலைக்கடை கட்டுநருக்கு ரூ.3900-11000 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் | 15 |
| 2 | | தொடக்க கூட்டுறவு பண்டகம். | 3 |
| 3 | | நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகங்கள் | 7 |
| 4 | | வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 3 |
| | மொத்தம் | | 28 |

மேற்படி காலிப்பணியிடங்கள் தோராயமானது மற்றும் மாறுதலுக்குட்பட்டது.

மேலே அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனத்தின் போது அரசுப் பணிக்கு இனச்சுழற்சி முறை பின்பற்றப்படுவது போல் மேற்காணும் பணியிடங்களுக்கும் இனவாரி சுழற்சி முறை ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே பின்பற்றப்படும்.

**குறிப்பு:**

1) மேற்படி நியமனங்களில் பெண்கள், ஆதரவற்ற விதவை, மாற்றுத்திறனாளிகள், முன்னாள் இராணுவத்தினர், மற்றும் தமிழ்வழியில் பயின்றவர்களுக்குரிய அரசு ஒதுக்கீடுகள் பின்பற்றப்படும்
2) தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் இல்லையெனில் பெண்களுக்கான ஒதுக்கீடு தகுதிவாய்ந்த அதே வகுப்பைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களை கொண்டு நிரப்பப்படும்
3) காலிப்பணியிடத்திற்கான பகிர்மான விவரம் (Distribution of Vacancies) பின்னர் தெரிவிக்கப்படும்.

**1) தகுதிகள்:**

**அ) வயது (01.01.2020 அன்றுள்ளபடி)**

1) விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும். (அதாவது 01.01.2002 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்தவராக இருத்தல் வேண்டும்)

2) விண்ணப்பதாரர் 01.01.2020 அன்று கீழ்காணும் வயது குறித்த தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| **1.** | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) மற்றும் இவ்வகுப்புகளைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் | வயது வரம்பு இல்லை |

| | | |
|---|---|---|
| 2. | இதர வகுப்பினர் (OC) | 30 வயது |
| 3. | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| 4. | இதர வகுப்பினைச் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | 48 வயது |
| 5. | இதர வகுப்பினைச் (OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள் | 40 வயது |

**ஆ: கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகள்:**

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிக்கை நாளன்று அதாவது 16.06.2020 அன்று பின்வரும் கல்வித்தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

| வ. எண். | பதவி | கல்வித் தகுதி |
|---|---|---|
| 1 | விற்பனையாளர் | அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (விளக்கம்:- அங்கீகரிக்கப்பட்ட பள்ளி என்பது தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப்படும் அல்லது தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற அல்லது மாநில கல்வி விதிகளின் கீழ் பள்ளி கல்வித் துறை இயக்குநரால் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டவை) |
| 2 | கட்டுநர் | அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் 10 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (விளக்கம்:- அங்கீகரிக்கப்பட்ட பள்ளி என்பது தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப்படும் அல்லது தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற அல்லது மாநில கல்வி விதிகளின் கீழ் பள்ளி கல்வித் துறை இயக்குநரால் அங்கீகரித்து அனுமதி வழங்கப்பட்டவை) |

**2) தெரிவு முறை:**

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் மேற்படி காலிப்பணியிடங்களுக்கான இந்த அறிவிக்கை மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆகியோருக்கு நடத்தப்படும் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர், நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் மற்றும் வகுப்பு வாரி சுழற்சி அடிப்படையில் காலிப்பணியிட எண்ணிக்கைக்கு ஏற்ப தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்வில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். நேர்முகத் தேர்விற்கு வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் மேற்படி தெரிவிற்கு கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

மேற்படி பணியாளர்களுக்கான தெரிவு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் முடிவுகள் வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் மேல்முறையீடு உரிய காரணங்களுடன் செய்யப்பட வேண்டும். மேற்சொன்ன காலக்கெடுவிற்குப் பின்னர் செய்யப்படும் முறையீடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

**3) தமிழில் தகுதி:-**

இந்த காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிக்கை தேதியன்று நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியை தமிழ் வழிக் கல்வியிலோ அல்லது தமிழை ஒரு பாடமாகவோ படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**4) உடற்தகுதி சான்றிதழ்:**

மேற்படி பதவிகளுக்கு தேர்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். தகுதி பெற்ற கண் மருத்துவரிடம் பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய மாற்றுத்திறன் மேற்படி பதவிகளுக்கான பணியினை செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவ குழுமத்திடமிருந்து பெறப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**5) விண்ணப்பங்கள் விநியோகித்தல்:**

அறிவிக்கப்பட்டுள்ள பணியிடங்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் கீழ்காணும் முகவரியிலுள்ள அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 முதல் 5.00 மணி வரை கட்டணமின்றி பெற்றுக் கொள்ளலாம்.

1) கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,
   N.S.R. ரோடு, ஆரொக்கியசாமி வீதி, கே.கே.புதூர். கோயம்புத்தூர். 641038.
2) கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகம், கோயம்புத்தூர் சரகம்
   சிந்தாமணி வளாகம், கோயமபுத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (மகளிர் கிளை) மேல் மாடியில், கிருஷ்ணசாமி முதலியார் வீதி, வடகோயம்புத்தூர். கோயம்புத்தூர்.

3) கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் அலுவலகம், பொள்ளாச்சி சரகம்,
16 காமராஜ் ரோடு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி.2
4) கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, (தலைமையகம்)
ஸ்டேட் பாங்கு ரோடு, கோயம்புத்தூர் இரயில் நிலையம் எதிரில்,
கோயம்புத்தூர்.
5) கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, மேட்டுப்பாளையம் கிளை, கே.கே. நகர், மேட்டுப்பாளையம்
6) இராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், அழகேசன் ரோடு, கோயம்புத்தூர்.

**6) விண்ணப்பக்கட்டணம்:**

விற்பனையாளர் பணியிடத்திற்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.150/- ஆகும்.

கட்டுநர் பணியிடத்திற்கான விண்ணப்பக்கட்டணம் ரூ.100/-ஆகும்.

விண்ணப்பத்துடன் கட்டணம் செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டின் நகல் இணைக்கப்பட வேண்டும்.

**7) கட்டண விலக்கு:**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள், அனைத்து பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு மேற்கண்ட விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் வருவாய்க் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து சான்று பெற்றிருக்க வேண்டும்.

“ஆதரவற்ற விதவை” என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/–த்திற்கும் (ரூபாய் நான்காயிரம்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக்குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி / சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார்.

விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பினும் இதர வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்

**8) விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறை:**

மேற்படி பணி நியமனத்திற்கான விண்ணப்பப்பதிவு கட்டணம் நியாயவிலைக்கடை விற்பனையாளர் பணியிடத்திற்கு ரூ.150/-ம் மற்றும் கட்டுநர் பணியிடத்திற்கு ரூ.100/-ஐ(கட்டண விலக்குக்கு தகுதியுள்ளோர் தவிர ஏனையோர்) கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளில் மூன்று படிகள் கொண்ட செலுத்துச் சீட்டு (Triplicate Challan) மூலம் செலுத்தி, அதில் ஒரு படியினை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி அளிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே விண்ணப்பிக்கும்போது ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் தனித்தனியே கட்டணம் செலுத்தப்பட வேண்டும். கட்டண விலக்கிற்கு அனுமதிக்கப்பட்டவர் தவிர இதர விண்ணப்பதாரர்கள் கட்டணம் செலுத்தி செலுத்துச் சீட்டின் பிரதியினை இணைத்திருக்க வேண்டும். கட்டணம் செலுத்தாமல் விண்ணப்பம் அனுப்பியிருப்பின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**9) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட பிறந்த தேதி கல்வித்தகுதி, இனம் மற்றும் சிறப்பு ஒதுக்கீடு கோரும் இனங்களுக்கு தேவையான சான்றிதழ்களின் நகல்களை இணைத்து அனுப்ப வேண்டும். சான்றிதழ்களின் நகல்களில் சுய சான்றிட்டோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் சான்று பெற்றோ சமர்பிக்கப்பட வேண்டும். எக்காரணத்தினை கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பக்கூடாது.

**10) நேர்முகத் தேர்வு:**

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படும். நேர்முகத் தேர்வு நடக்கும் நாள், நேரம், மற்றும் இடம் குறித்த விவரம் விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும். நேர்முகத் தேர்வுக்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்கு விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் நகல் ஒன்றுடன் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளாதவர்கள் எக்காரணம் கொண்டும் தெரிவுக்கு கருத்தில்

கொள்ளப்படமாட்டார்கள். மேலும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுவதால் மட்டுமே ஒரு விண்ணப்பதாரர் நியமனத்திற்கு உரிமை கோர தகுதியடையவர் ஆகமாட்டார்.

**11) தடையின்மைச் சான்றிதழ்:**

விண்ணப்பதாரர்கள் ஏற்கெனவே பணியில் இருப்பவர்களாக இருப்பின் அவர்கள் பணியாற்றும் அலுவலகத்திலிருந்து இப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்கவும், நியமனத்திற்கும் தடையில்லா சான்று பெற்று நேர்முகத் தேர்வு அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

**12) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுதல்:**

1) விண்ணப்பபடிவம் விண்ணப்பதாரரின் சொந்த கையெழுத்தில் நீலம் அல்லது கறுப்பு நிற பந்துமுனைப்பேனாவால் (Ball Point pen) பூர்த்தி செய்யபட்டிருக்க வேண்டும்.
2) விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் செய்து அனுப்ப வேண்டும். கையொப்பம் இடாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3) விண்ணப்பப்படிவத்தில் அனைத்து கலங்களும் விடுதலின்றியும், அடித்தல் திருத்தல் இல்லாமலும், முழுமையாக பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
4) விண்ணப்பத்துடன் விண்ணப்பக் கட்டணம் (விலக்கு கோருபவர்களை தவிர) தவறாமல் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.
5) விண்ணப்பதாரர் மூன்று மாதத்திற்கு மேற்படாத கடவுச்சீட்டு அளவு நிழற்படம் ஒன்றினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுவதுடன், தனியாக ஒரு நிழற்படத்தினை, நிழற்படத்தின் பின்புறம் விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் விண்ணப்ப எண் எழுதி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
6) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேவையான சான்றிதழ் நகல்களுடன் சுயமுகவரியிட்ட ரூ.22.00ற்கான தபால் வில்லை ஒட்டிய 24x40 செ.மீ உறையினையும் இணைத்து அனுப்ப வேண்டும்.
7) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரிலோ, தபால் மூலமாகவோ பின்வரும் முகவரிக்கு 15.07.2020 அன்று மாலை 5.45 மணிக்குள் அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**13) இதர நிபந்தனைகள்:**

1) நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தெரிவு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் உடனடியாக இரத்து செய்யப்படும்.
2) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையினை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு/ திருத்துவதற்கு/ மற்றும் கெடு தேதியை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு முழு உரிமையுண்டு.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**
**தலைவர் / மண்டல இணைப்பதிவாளர்**
**கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,**
**கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம்,**
**N.S.R. ரோடு, ஆரோக்கியசாமி வீதி, கே.கே.புதூர் (அஞ்) கோயம்புத்தூர். 641038**

15.07.2020 அன்று மாலை 5.45 மணிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டாது. பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது. மேலும் அஞ்சல் தாமதத்திற்கான காரணங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பு ஏற்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே, வீண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை மேலே குறிப்பிட்ட முகவரியில் 15.07.2020 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு முன்னதாகவே அஞ்சல் செய்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**உதவி மையம் தொடர்பு தொலைபேசி எண்: 0422-2448308**

தலைவர் / மண்டல இணைப்பதிவாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்.
கோயம்புத்தூர்.